

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

1

أَعُوذُ بِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ مِنْ شَرِّ مَا خَلَقَ

அஊது பிகலிமாதில்லாஹித் தாம்மாதி மின் ஷர்ரி மா கலக்

அல்லாஹ்வின் நிறைவான வார்த்தைகளைக் கொண்டு அவன் படைத்தவற்றின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்.

**சிறப்பு**

நபி(ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, அல்லாஹ்வின் தூதரே! நேற்றிரவு என்னைத் தேள் ஒன்று கொட்டிவிட்டது. அதனால் நான் (நிம்மதியான தூக்கத்தை) இழந்துவிட்டேன் என்று கூறினார். அதற்கு நபி(ﷺ) அவர்கள், 'நீ மாலைப் பொழுதை அடையும்போது இதைக் கூறியிருந்தால் அது உனக்குத் தீங்கிழைத்திருக்காது என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், முஸ்லிம் 5248.

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

2

## இப்ராஹீம்(அலை) மற்றும் முஹம்மது(ﷺ)அவர்கள் இருவரும் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு ஓதிய துஆ

اَعُوْذُ بِكَلِمَاتِ اللهِ التَّآمَّةِ مِنْ كُلِّ
شَيْطَانٍ وَّهَآمَّةٍ وَّمِنْ كُلِّ عَيْنٍ لَّآمَّةٍ

அஊது பி கலிமாதி(ت)ல்லாஹித் தா(ت)ம்ம மின் குல்லி ஷை(ش)தா(ط)னிவ்வ ஹாம்ம வமின் குல்லி ஐனில்லாம்ம.

அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும் நச்சுப் பிராணியிடமிருந்தும் தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்"

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், புஹாரி 3371

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

3

## நபி(ﷺ) அவர்களுக்கு அல்லாஹ் கட்டளையிட்ட துஆ

رَّبِّ اَعُوۡذُ بِكَ مِنۡ هَمَزٰتِ الشَّيٰطِيۡنِ ۙ‏
وَاَعُوۡذُ بِكَ رَبِّ اَنۡ يَّحۡضُرُوۡنِ

ரப்பி அவூதுபிக மின் ஹமஸா(ز)திஷ் ஷயாதீனி
வ அவூதுபிக ரப்பி அய்யஹ்ளுரூன்

என் இறைவனே! ஷைத்தானின் தூண்டுதல்களிலிருந்து நான் உன்னைக் கொண்டு காவல் தேடுகிறேன். இன்னும் அவை என்னிடம் நெருங்காமலிருக்கவும் என் இறைவனே! உன்னிடம் காவல் தேடுகிறேன்.

அல்குர்ஆன் 23:97-98

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

4

## நபி(ﷺ) அவர்கள் ஸுஜூதில் ஓதிய துஆ

اللَّهُمَّ أَعُوذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ
وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوبَتِكَ وَأَعُوذُ بِكَ مِنْكَ
لَا أُحْصِي ثَنَاءً عَلَيْكَ أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ

அல்லாஹும்ம அஊது(ذ) பி ரிளா(ض)க மின் சக(خ)தி(ط)க, வபி முஆபா(ف)திக மின் உகூபதிக, வ அஊது(ذ) பிக மின்க, லா உஹ்ஸி(ص) ஸ(ث)னாஅன் அலைக அன்த கமா அஸ்(ث)னைத அலா நப்(ف)ஸிக

யா அல்லாஹ் ! உனது திருப் பொருத்தத்தைக் கொண்டு உனது கோபத்தை விட்டும், உனது மன்னிப்பைக் கொண்டு உனது தண்டனையை விட்டும், உன்னைக் கொண்டு நான் பாதுகாப்புத் தேடுகிறேன். நீயே உன்னைப் புகழ்ந்தது போன்று உன்னை முழுமையாகப் புகழ என்னால் முடியாது (அதற்கு நான் சக்தி பெற மாட்டேன்).

அறிவிப்பாளர் :ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 839

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

5

## தொழுகையின் இறுதி இருப்பில் நபி(ﷺ) அவர்கள் ஓதிய துஆ

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَفِتْنَةِ الْمَمَاتِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْمَأْثَمِ وَالْمَغْرَمِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் அதாபில் கப்ரி,
வ அஊது பிக மின் ஃபித்னதில் மஸீஹித் தஜ்ஜால்.
வ அஊது பிக மின் ஃபித்னதில் மஹ்யா வ ஃபித்னதில் மமாத்தி
அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் மஃசமி வல் மக்ரமி

’இறைவா! கப்ருடைய வேதனையைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். பாவங்களைவிட்டும் கடனைவிட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்’

**அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், புகாரி 832**

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

6

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا عَمِلْتُ وَمِنْ شَرِّ مَا لَمْ أَعْمَلْ

அல்லாஹும்ம இன்னி அஊது பி(B)க மின் ஷர்ரி மா அமில்து வமின் ஷர்ரி மா லம் அஃமல்

யா அல்லாஹ்! நான் செய்தவற்றின் தீங்கை விட்டும், செய்யாதவற்றின் தீங்கை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 2716

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

7

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ النَّارِ

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْفِتَنِ مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الدَّجَّالِ

அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் அதாபின்னாரி, அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் அதாபில் கப்ரி,அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின பி(ف)தனி மா த(ظ)ஹர மின்ஹா வமா பதன, அல்லாஹும்ம இன்னி அஊது பிக மின் பி(ف)த்னதித் தஜ்ஜால்.

யா அல்லாஹ் நான் உன்னிடம் நரகத்தின் வேதனையை விட்டும், கப்ரின் வேதனையை விட்டும், வெளிப்படையான மறைமுகமான குழப்பங்களை விட்டும், தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: ஸைZத் இப்னு ஸாபித் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5502

# நபி (ﷺ) அவர்கள்
# பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

8

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْعَجْزِ، وَالْكَسَلِ، وَالْجُبْنِ، وَالْبُخْلِ، وَالْهَرَمِ، وَعَذَابِ الْقَبْرِ اَللّٰهُمَّ آتِ نَفْسِيْ تَقْوَاهَا، وَزَكِّهَا أَنْتَ خَيْرُ مَنْ زَكَّاهَا، أَنْتَ وَلِيُّهَا وَمَوْلَاهَا، اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عِلْمٍ لَّا يَنْفَعُ، وَمِنْ قَلْبٍ لَّا يَخْشَعُ، وَمِنْ نَفْسٍ لَّا تَشْبَعُ، وَمِنْ دَعْوَةٍ لَّا يُسْتَجَابُ لَهَا.

அல்லாஹும்ம இன்னி அஊது பிக்க மினல் அஜ்ஸி, வல்கஸலி, வல்ஜுப்னி, வல்புக்(ڂ)லி, வல்ஹரமி, வ அதாபில் கப்ர். அல்லாஹும்ம ஆத்தி நப்(f)ஸீ தக்வாஹா, வ ஸ(z)க்கிஹா, அன்த கை(ڂ)ரு மன் ஸ(z)க்காஹா, அன்த வலிய்யுஹா வ மவ்லாஹா. அல்லாஹும்ம இன்னி அஊது பிக்க மின் இல்மி(ன்)லா யன்ப(f)உ, வ மின் கல்பில்லா யக்(ڂ)ஷஉ, வ மின் நப்(f)ஸின் லா தஷ்பஉ, வ மின் தஃவதில்லா யுஸ்தஜாபு லஹா.

இறைவா! உன்னிடம் நான் இயலாமையிலிருந்தும் சோம்பலிலிருந்தும் கோழைத்தனத்திலிருந்தும் கருமித்தனத்திலிருந்தும் தள்ளாமையிலிருந்தும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். இறைவா! எனது உள்ளத்தில் உன்னைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தி, அதைத் தூய்மைப்படுத்துவாயாக! அதைத் தூய்மைப்படுத்துவோரில் நீயே சிறந்தவன். நீயே அதன் உரிமையாளன்; அதன் காவலன். இறைவா! உன்னிடம் நான் பயனளிக்காத கல்வியிலிருந்தும் உன்னை அஞ்சாத உள்ளத்திலிருந்தும் திருப்தியடையாத மனத்திலிருந்தும் ஏற்கப்படாத பிரார்த்தனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்.

**அறிவிப்பவர்: ஸைத் பின் அர்கம் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5266**

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

9

بِسْمِ اللهِ

(மூன்று முறை)

أَعُوذُ بِاللهِ وَقُدْرَتِهِ مِنْ شَرِّ مَا أَجِدُ وَأُحَاذِرُ

(ஏழு முறை)

உஸ்மான் பின் அபில்ஆஸ் அஸ்ஸகஃபீ (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம், தாம் இஸ்லாத்தைத் தழுவியது முதல் தமது உடலில் வலி ஏற்பட்டுள்ளதாக முறையிட்டார்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், 'நீர் உமது உடலில் வலியுள்ள இடத்தில் கையை வைத்து, **'பிஸ்மில்லாஹ்' என மூன்று முறை** கூறிவிட்டு, **ஏழு முறை 'அவூது பில்லாஹி வ குத்ரத்திஹி மின் ஷர்ரி மா அஜிது வ உஹாதிரு'** (பொருள்: நான் அல்லாஹ்விடம் அவனது ஆற்றலை முன்வைத்து, நான் உணர்கின்ற தீமையிலிருந்தும் நான் அஞ்சுகின்ற தீமையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன்) என்று சொல்வீராக' என்றார்கள்.

அறிவிப்பாளர்: உஸ்மான் பின் அபில் ஆஸ் அஸ்ஸஃபி(ரலி) அவர்கள், முஸ்லிம் 4430

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

**10**

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ جَهْدِ الْبَلَاءِ، وَدَرَكِ الشَّقَاءِ، وَسُوءِ الْقَضَاءِ، وَشَمَاتَةِ الْأَعْدَاءِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக
மின் ஜஹ்தில் பலாயி
வ தரகிஷ் ஷகாயி வ ஸூயில் களாயி,
வ ஷமாத(த்)தில் அஃதாயி

யா அல்லாஹ் ! தாங்கமுடியாத சோதனை, அழிவில் வீழ்வது, விதியின் கேடு, எதிரிகளால் ஏற்படும் மன உளைச்சல் ஆகியவற்றிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 6616

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

11

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْفَقْرِ، وَأَعُوْذُ بِكَ مِنَ الْقِلَّةِ وَالذِّلَّةِ، وَأَعُوْذُ بِكَ أَنْ أَظْلِمَ أَوْ أُظْلَمَ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ப(ف)க்ரி வஅஊது பிக மினல் கில்லதி வத்(ذ)தில்லதி வஅஊது பிக அன் அழ்(ظ)லிம அவ் உழ்(ظ)லம

யா அல்லாஹ்! நான் உன்னிடம் ஏழ்மையை விட்டும், நன்மைகள் (நலவுகள்) குறைவதை விட்டும், இழிவை விட்டும், நான் அநியாயம் செய்வதை விட்டும், பிறரால் அநியாயம் செய்யப் படுவதை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள், நஸாயீ 5475

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

12

أَعُوذُ بِعِزَّتِكَ، الَّذِي لَا إِلَهَ إِلَّا أَنْتَ، الَّذِي لَا يَمُوتُ، وَالْجِنُّ وَالإِنْسُ يَمُوتُونَ

அவூது பிஇஸ்( ز )ஸதிக அல்லதீ லா இலாஹ இல்லா அன்த, அல்லதீ லா யமூது வல் ஜின்னு வல் இன்ஸு யமூதூன்

(இறைவா!) உன் கண்ணியத்தின் பெயரால் பாதுகாப்புக் கோருகிறேன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. ஜின் இனத்தாரும் மனித குலத்தாரும் இறந்துவிடுவார்கள்; (ஆனால்,) நீ இறக்கமாட்டாய்

அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புஹாரி 7383.

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

13

اَللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ، وَتَحَوُّلِ عَافِيَتِكَ، وَفُجَاءَةِ نِقْمَتِكَ، وَجَمِيعِ سَخَطِكَ

அல்லாஹும்ம இன்னி அவூது பிக மின் ஸ(ز)வாலி நிஃமதிக, வதஹவ்வுலி ஆபி(ف)யதிக வபு(ف)ஜாஅதி நிக்மதிக வஜமீயி ஸகதிக.

யா அல்லாஹ்! உன் அருட்கொடைகள் (என்னை விட்டு) நீங்குவதை விட்டும். நீ (எனக்கு) அளித்த ஆரோக்கியத்தன்மை (என்னை விட்டு) மாறுவதை விட்டும் உனது திடீர் தண்டனையை விட்டும் உனது (சகலவிதமான) கோபங்களை விட்டும நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)அவர்கள், முஸ்லிம் 2739

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

14

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ، وَالْعَجْزِ وَالْكَسَلِ، وَالْبُخْلِ، وَالْجُبْنِ، وَضَلَعِ الدَّيْنِ، وَغَلَبَةِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னி அஊது பிக மினல் ஹம்மி, வல்ஹஸ(ز)னி, வல் அஜ்ஸி(ز), வல்கஸலி, வல்புக்(خ)லி, வல்ஜுப்னி, வ ளலஇத் தைனி, வ க(غ)லபதிர் ரிஜால்.

இறைவா! (வருங்காலத்தைப் பற்றியக்) கவலையிலிருந்தும், (நடந்து முடிந்துவிட்டவை பற்றிய) துக்கத்திலிருந்தும், இயலாமையிலிருந்தும், சோம்பலிலிருந்தும் கஞ்சத்தனத்திலிருந்தும், கோழைத்தனத்திலிருந்தும், கடன் சுமையிலிருந்தும், பிற மனிதர்களின் அடக்கு முறைகளிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.)

அறிவிப்பவர்: அனஸ் (ரலி)அவர்கள், புஹாரி 6363

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

15

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

قُلۡ اَعُوۡذُ بِرَبِّ الۡفَلَقِۙ ﴿۱﴾ مِنۡ شَرِّ مَا خَلَقَۙ ﴿۲﴾

وَمِنۡ شَرِّ غَاسِقٍ اِذَا وَقَبَۙ ﴿۳﴾ وَمِنۡ شَرِّ النَّفّٰثٰتِ فِى الۡعُقَدِۙ ﴿۴﴾

وَمِنۡ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ﴿۵﴾

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

குல் அவூது பி ரப்பில் ப(ف)லக். மின் ஷர்ரி மா க(خ)லக்.

வமின் ஷர்ரி கா(غ)ஸிகின் இதா வகப். வமின் ஷர்ரின்

நப்(ف)பாஸா(த்)தி பி(ف)ல் உகத். வமின் ஷர்ரி

ஹாஸிதின் இதா ஹஸத்.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (நபியே!) நீர் சொல்வீராக! அதிகாலையின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும், இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும், இன்னும், முடிச்சுகளில் ஊதும் பெண்களின் தீங்கை விட்டும், பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).

**திருக்குர்ஆன் 113:1-5**

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

16

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۝١ مَلِكِ النَّاسِ ۝٢ اِلٰهِ النَّاسِ ۝٣

مِنْ شَرِّ الْوَسْوَاسِ الْخَنَّاسِ ۝٤ الَّذِىْ يُوَسْوِسُ فِىْ صُدُوْرِ النَّاسِ ۝٥

مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۝٦

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம், குல்அவூது பிரப்பின்னாஸ். மலி(க்)கின்னாஸ். இலாஹின்னாஸ். மின் ஷர்ரில் வஸ்வாஸில் க(خ)ன்னாஸ். அல்லதீ யுவஸ்விஸு பீ(ف) ஸு(ص)துரின்னாஸ். மினல் ஜின்னத்தி வன்னாஸ்.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால், (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன். (அவனே) மனிதர்களின் அரசன்; (அவனே) மனிதர்களின் நாயன். பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்). அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான். (இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.

**திருக்குர்ஆன் 114:1-6**

# நபி (ﷺ) அவர்கள்
# பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

17

اَللَّهُمَّ إِنِّىْ أَعُوذُ بِكَ مِنَ الْبَرَصِ
وَالْجُنُوْنِ وَالْجُذَامِ وَمِنْ سَيِّءِ الأَسْقَامِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக
மினல் பரஸி(ص) வல் ஜுனூனி வல்
ஜுதாமி வமின் ஸய்யிஇல் அஸ்காம்

யா அல்லாஹ் ! கருங்குஷ்டம்,
பைத்தியம், தொழுநோய், மற்றும் கொடும்
நோய்களை விட்டும் உன்னிடம் நான்
பாதுகாவல் தேடுகிறேன்.

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள், அபூதாவூத் 1554

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

18

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْجُبْنِ وَأَعُوذُ بِكَ أَنْ أُرَدَّ إِلَى أَرْذَلِ
الْعُمُرِ وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الدُّنْيَا وَأَعُوذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மினல் ஜுப்னி,
வஅஊது பிக அன் உரத்த இலா அர்தலில் உமுரி,
வ அஊது பிக மின் ஃபித்னத்தித் துன்யா,
வஅஊது பிக மின் அதாபில் கப்ரி

'இறைவா! நான் கோழைத்தனத்திலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்; தள்ளாத வயது வரை நான் வாழ்வதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்;
உலகின் சோதனைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்;
புதைகுழியின் வேதனையிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்'

அறிவிப்பாளர்: ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரலி) அவர்கள், புகாரி 2822

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

**19-A**

اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنَ الْخَيْرِ كُلِّهِ عَاجِلِهِ وَآجِلِهِ ، مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ ، وَأَعُوذُ بِكَ مِنَ الشَّرِّ كُلِّهِ عَاجِلِهِ وَآجِلِهِ ، مَا عَلِمْتُ مِنْهُ وَمَا لَمْ أَعْلَمْ ، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ مِنْ خَيْرِ مَا سَأَلَكَ عَبْدُكَ وَنَبِيُّكَ ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا عَاذَ بِهِ عَبْدُكَ وَنَبِيُّكَ ، اللَّهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْجَنَّةَ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ ، وَأَعُوذُ بِكَ مِنَ النَّارِ وَمَا قَرَّبَ إِلَيْهَا مِنْ قَوْلٍ أَوْ عَمَلٍ ، وَأَسْأَلُكَ أَنْ تَجْعَلَ كُلَّ قَضَاءٍ قَضَيْتَهُ لِي خَيْرًا .

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், இப்னுமாஜா 3846

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

19-B

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மினல் கைரி குல்லிஹி ஆஜிலிஹி வஆஜிலிஹி மா அலிம்த்து மின்ஹு வமாலம் அஃலம் வ அவூது பிக்க மினஷ் ஷர்ரி குல்லிஹி ஆஜிலிஹி வ ஆஜிலிஹி மா அலிம்த்து மின்ஹு வமாலம் அஃலம் அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின் ஹைரி மா ஸஅலக்க அப்துக வநபிய்யுக வ அவூது பிக மின்ஷர்ரி மாஆத பிஹி அப்துக வநபிய்யுக அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுகல் ஜன்னத்த வமா கர்ரப இலைஹா மின் கவ்லின் அவ் அமலின் வ அவூது பிக மினனன் நாரி வமா கர்ரப இலைஹா மின் கவ்லின் அவ் அமலின் வ அஸ்அலுக்க அன் தஜ்அல குல்ல களாயின் கலைத்தஹு லீ கைரன்

யா அல்லாஹ் ! நான் உன்னிடம் நான் அறிந்த அறியாத அவசரமான, தாமதமான அனைத்து விதமான நலவுகளிலிருந்தும் கேட்கிறேன். யா அல்லாஹ் ! நான் உன்னிடம் நான் அறிந்த அறியாத அவசரமான தாமதமான அனைத்து கெடுதிகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யா அல்லாஹ் ! உனது அடியாரும், தூதரும் உன்னிடம் கேட்ட அனைத்து நலவுகளையும் உன்னிடம் கேட்கிறேன். யா அல்லாஹ் ! உனது அடியாரும், தூதரும் உன்னிடம் பாதுகாப்புத் தேடிய அனைத்து கெடுதிகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். சுவனத்தின் பால் நெருக்கி வைக்கும் சொற்களையும் அல்லது செயல்களையும் நான் உன்னிடம் கேட்கிறேன், நரகத்தின் பால் நெருக்கிவைக்கும் சொற்களையும் அல்லது செயல்களையும் விட்டு உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். யா அல்லாஹ் ! நீ எனக்கு முடிவு செய்த அனைத்தையும் நன்மையாக இருப்பதை உன்னிடம் கேட்கிறேன்

**அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், இப்னுமாஜா 3846**

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

20

## இரவில் தூங்கும் முன், மற்றும் தொழுகையில் ஸலாம் கொடுத்த பின் நபி(ﷺ) அவர்கள் ஓதிய துஆ

رَبِّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ

ரப்பி கினீ அதாபக யவ்ம தப்அஸு(ث) இபாதக

இறைவா ! உனது அடியார்களை உயிர் கொடுத்து எழுப்பும் நாளில் உனது தண்டனையிலிருந்து என்னைக் காப்பாயாக !

அறிவிப்பாளர்: பராஉ பின் ஆஸிப் (ரலி) அவர்கள், முஸ்லிம் 1280

# நபி (ﷺ) அவர்கள்
# பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

**21**

اَللَّهُمَّ رَبَّ جِبْرَائِيلَ وَمِيكَائِيلَ وَرَبَّ إِسْرَافِيلَ
أَعُوذُ بِكَ مِنْ حَرِّ النَّارِ وَمِنْ عَذَابِ الْقَبْرِ

அல்லாஹும்ம ரப்ப ஜிப்ராயீல வமீகாயீல
வரப்ப இஸ்ராபீ(ف)ல அவூது பிக மின்
ஹர்ரின்னாரி வமின் அதாபில் கப்ர்

ஜிப்ரீலின், மீகாயிலின், இஸ்ராஃபிலின்
இரட்சகனே! உன்னிடம் நரக வெப்பத்தை
விட்டும், கப்ரின் வேதனையை விட்டும்
பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், நஸாயீ 5534

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

22

## சூறாவளிக் காற்று வீசும்போது நபி(ﷺ) அவர்கள் ஓதிய துஆ

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَهَا، وَخَيْرَ مَا فِيهَا، وَخَيْرَ مَا أُرْسِلَتْ بِهِ، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهَا، وَشَرِّ مَا فِيهَا، وَشَرِّ مَا أُرْسِلَتْ بِهِ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க கை(خ)ரஹா வகை(خ)ர மாபீ(ف)ஹா வகை(خ)ர மா உர்ஸிலத் பிஹி. வஅவூது பி(க்)க மின் ஷர்ரிஹா வஷர்ரி மா பீ(ف)ஹா வஷர்ரி மா உர்ஸிலத் பிஹி

நபி (ﷺ) அவர்கள் சூறாவளிக் காற்று வீசும்போது, ’இறைவா, இந்தக் காற்றின் நன்மையையும் அதனுள்ளே மறைந்திருக்கும் நன்மையையும் அது எதனுடன் அனுப்பப் பெற்றுள்ளதோ அதன் நன்மையையும் உன்னிடம் வேண்டுகிறேன். இந்தக் காற்றின் தீங்கிலிருந்தும், அதனுள்ளே மறைந்திருக்கும் தீங்கிலிருந்தும், அது எதனுடன் அனுப்பப் பெற்றுள்ளதோ அதன் தீங்கிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்’ என்று கூறுவார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) அவர்கள், முஸ்லிம் 1640

# நபி (ﷺ) அவர்கள்
# பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

23-A

## காலை, மாலை ஓதும் துஆக்கள்

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي دِينِي وَدُنْيَايَ وَأَهْلِي وَمَالِي

اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَاتِي وَآمِنْ رَوْعَاتِي

اَللّٰهُمَّ احْفَظْنِي مِنْ بَيْنِ يَدَيَّ وَمِنْ خَلْفِي وَعَنْ يَمِينِي وَعَنْ
شِمَالِي وَمِنْ فَوْقِي وَأَعُوذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِي

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அபூதாவூத் 5076, இப்னு மாஜா 3871

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

23-B

## காலை, மாலை ஓதும் துஆக்கள்

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)கல் அப்(ف)வ வல் ஆபி(ف)யத பி(ف)த்துன்யா வல் ஆகிரா. அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)கல் அப்(ف)வ வல் ஆபி(ف)யத பீ(ف)தீனீ, வதுன்யாய, வஅஹ்லீ, வமாலீ, அல்லாஹும்மஸ்துர் அவ்ரா(த்)தீ, வஆமின் ரவ்ஆ(த்)தீ, அல்லாஹும்மஹ் ப(ف)ழ்(ظ)னீ மின் பைனி யதய்ய, வமின் கல்பீ(ف), வஅன் யமீனீ, வஅன் ஷிமாலீ, வமின் ப(ف)வ்கீ, வஅஊது பிஅழ(ظ)ம(த்)திக அன் உக்(غ)தால மின் தஹ்(த்)தீ.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அபூதாவூத் 5076, இப்னு மாஜா 3871

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

23-C

## காலை, மாலை ஓதும் துஆக்கள்

யா அல்லாஹ்! இம்மை மற்றும் மறுமையின் மன்னிப்பு, சுகம் ஆகியவற்றை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் என் மார்க்கம், என் இவ்வுலக வாழ்வு, என் குடும்பம், என் செல்வம் ஆகியவற்றில் மன்னிப்பையும், சுகத்தையும் கேட்கிறேன்.

யா அல்லாஹ்! என் குறையை மறைப்பாயாக, என் திடுக்கங்களிலிருந்து அபயம் அளிப்பாயாக.

யா அல்லாஹ்! எனக்கு முன்னால், எனக்குப் பின்னால் என் வலப்பக்கம், என் இடப் பக்கம், எனக்கு மேலிருந்து, கீழிருந்து பாதுகாப்பளிப்பாயாக. உன்னுடைய மகத்துவத்தைக் கொண்டு எனக்கு கீழ் இருந்து நான் தாக்கப்படுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள், அபூதாவுத் 5076, இப்னு மாஜா 3871

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

24

நபி(ﷺ) இவ்வாறு பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்:

اَللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ مُّنْكَرَاتِ الْأَخْلَاقِ وَالْأَعْمَالِ وَالْأَهْوَاءِ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக மின் முன்கராதில் அஃ(க்)லாகி வல் அஃமாலி வல் அஹ்வாஃ

யா அல்லாஹ்! நான் உன்னிடம் தீய பண்புகளை விட்டும், தீய செயல்களை விட்டும், தீய ஆசைகளை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: குத்பதிப்னு மாலிக் (ரலி) அவர்கள், திர்மிதி 3591

# நபி (ﷺ) அவர்கள் பாதுகாப்புத் தேடி ஓதிய துஆக்கள்

25

اَللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْكَسَلِ وَالْهَرَمِ، وَالْمَأْثَمِ وَالْمَغْرَمِ، وَمِنْ فِتْنَةِ الْقَبْرِ وَعَذَابِ الْقَبْرِ، وَمِنْ فِتْنَةِ النَّارِ وَعَذَابِ النَّارِ، وَمِنْ شَرِّ فِتْنَةِ الْغِنَى، وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْفَقْرِ، وَأَعُوذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيحِ الدَّجَّالِ

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மினல் கஸலி வல்ஹரமி வல்மஃஸ(ث)மி வல்மக்(غ)ரமி, வமின் ஃபித்னத்தில் கப்றி வஅதாபில் கப்றி, வமின் ஃபித்னத்திந் நாரி வஅதாபிந் நாரி, வமின் ஷர்ரி ஃபித்னத்தில் கி(غ)னா. வ அஊது பிக்க மின் ஃபித்னத்தில் ஃபக்ர். வ அஊது பிக்க மின் ஃபித்னத்தில் மஸீஹித் தஜ்ஜால்.

இறைவா! உன்னிடம் நான் சோம்பலிலிருந்தும், தள்ளாமையிலிருந்தும், பாவத்திலிருந்தும், கடனிலிருந்தும், மண்ணறையின் சோதனையிலிருந்தும் அதன் வேதனையிலிருந்தும், நரகத்தின் சோதனையிலிருந்தும், அதன் வேதனையிலிருந்தும், செல்வத்தின் தீமைகளிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். மேலும், நான் உன்னிடம் வறுமையின் சோதனையிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். (பெருங்குழப்பவாதியான) மஸீஹுத் தஜ்ஜாலின் சோதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

**அறிவிப்பாளர்: ஆயிஷா (ரலி) அவர்கள், புகாரி 6368**